1st September 1970] [திரு. டி. கே. சன்முகம்]

யெல்லாம் அடுத்த ஆண்டில் திருத்தி வெளியிட வேண்டிய முயற்சிகளைக் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக் கொள்ளுகின்றேன்.

III. GOVERNMENT MOTION

Suspension of Rule 41 of the Council Rules

THE HON. THIRU V.R. NEDUNCHEZHIYAN : Mr. Chairman, Sir, I move—

"That the proviso to rule 41 be suspended with reference to the time-limit prescribed therein in its application to this discussion and that one hour be allotted for the discussion."

MR. CHAIRMAN : The question is —

"That the proviso to rule 41 be suspended with reference to the time-limit prescribed therein in its application to this discussion and that one hour be allotted for the discussion."

The motion was put and carried.

II HALF-HOUR DEBATE ON NATIONALISED TEXT-BOOKS -Cont.

MR. CHAIRMAN : I request the hon. Members to cut short their speeches. There are too many speakers. The Hon. Minister has to reply at 5-15 p.m.

*திரு. எஸ். முத்துசாமி: மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, அரசு பாடப் புத்தகங்களை வெளியிட்டதில் இந்த ஆண்டு ஏற்பட்ட குறைகளைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக தனிப்பட்ட கம்பெனிகள் புத்தகங்களை வெளியிடுவதற்கும், அரசு வெளியிடுவதற்கும் பெரிய வேறுபாடுகள் உள்ளன என்பதைக் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தனிப்பட்ட கம்பெனிகள் புத்தகம் வெளியிட்டு, அவைகள் கிடைக்காவிட்டாலும், அவற்றில் தவறுகள் இருந்தாலும், அது மக்கள் எல்லோருடைய கவனத்தையும் திருப்புவதில்லை. ஆனால் அரசுத் துறையில் எந்தக் காரியத்தைச் செய்தாலும், மக்களுடைய கவனம் திரும்பி, அரசு இதைச் செய்திருக்கக் கூடாது என்ற அளவில் கருத்துக்கள் அதிகமாக எல்லாத் துறைகளிலும் காட்டப்படுகின்றன. அரசுத் துறையில் வெளியிடப்பட்ட பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது இவ்வாண்டு எல்லோருடைய கவனத்தையும் அதிகமாகத் திருப்பியிருக்கிறது. கடந்த காலத்திலேயும் தனிப்பட்ட கம்பெனிகளால் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்ட புத்தகங்கள் கிராமப் பகுதிகளில், 3, 4 மாத காலத்திற்கு வராமலிருந்து காலம் தாழ்ந்து வந்திருக்கின்றன என்பதை ஆசிரியர் என்ற முறையில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதற்காக அரசு 3, 4 மாத காலம் கடந்து புத்தகத்தை அச்சடித்து வெளியிட்டிருப்பது சரியான காரியம் என்று நான் ஒப்பமாட்டேன். அரசு மிகத் துணிச்சலான காரியத்தை, புத்தகங்கள் எல்லாவற்றையும் அரசே எடுத்து அச்சடித்து வினியோகிக்க வேண்டும்